# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## மானியக் கோரிக்கை எண்.10

## வணிகவரிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு

2013-2014


**பி வி ரமணா**

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2013

# பொருளடக்கம்


| வ. எண் | | பொருள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | | முன்னுரை | 1-2 |
| 2. | | நிர்வாக அமைப்பு | 2 |
| | 2.1 | வரிவிதிப்புப் பிரிவு | 2-3 |
| | 2.2 | தணிக்கைப் பிரிவு | 3-4 |
| | 2.3 | மேல்முறையீட்டுப் பிரிவு | 4-5 |
| | 2.4 | செயலாக்கப் பிரிவு | 6-7 |
| 3. | | புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | 7-8 |
| 4. | | வணிகவரிப் பணியாளர் பயிற்சி மையம் | 9 |
| 5. | | துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 10 |
| 6. | | வருவாய் வசூலின் போக்கு | 11 |
| 7. | | கடந்த ஏழு ஆண்டுகளில் சட்ட வாரியான வருவாய் | 12 |
| 8. | | வரி நிர்வாகத்திற்கான செலவு | 13 |
| 9. | | வரி/மாநில மொத்த உற்பத்தி உடனான (GSDP) வருவாய் வீதம் | 13-14 |
| 10. | | நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்கள் | 14-15 |
| | 10.1 | வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் (Deemed Assessment) கருதுவதற்கு வழிவகை செய்தது | 15 |
| | 10.2 | தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பினை நிறுவியது | 16 |
| | 10.3 | சிறு வணிகர்கள் உள்ளீட்டு வரி வரவினைப் (Input Tax Credit) பெறுவதற்கு வழிவகை செய்தது | 16 |
| | 10.4 | இணக்க வரி (Compounding Tax) செலுத்தும் முறையிலுள்ள முரண்பாட்டைக் களைந்தது | 17 |
| | 10.5 | துணை வணிகவரி அலுவலர்களின் வரிவிதிப்பு அதிகார வரம்பினை உயர்த்தியது | 17-18 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | | | வரி விலக்குகள் / குறைப்புகள் மற்றும் சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள் | |
| | 11.1 | | வரி விலக்குகள் / குறைப்புகள் | |
| | | 11.1.1 | ஜென்செட்டுகள் மீதான வரிவீதத்தில் குறைப்பு | 18 |
| | | 11.1.2 | உயரழுத்த மின் நுகர்வோர்கள் (HT Consumers) பயன்படுத்தும் எரி உலை எண்ணெய் (Furnace oil) மீது வரி விலக்கு | 18-19 |
| | | 11.1.3 | மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களுக்கு (Battery Operated Motorised Retrofitted Scooters) வரி விலக்கு | 19 |
| | 11.2 | | சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள் | |
| | | 11.2.1 | வர்த்தகப் புலனாய்வுப் பிரிவு (Business Intelligence Unit) | 19-20 |
| | | 11.2.2 | பட்டயக்கணக்கர் (Chartered Accountant) / விலை மதிப்பீட்டுக்கணக்கர் (Cost Accountant) கொண்டு தணிக்கை செய்தல் | 20-21 |
| 12. | | | தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் தொகுப்பு நிதியை (Corpus fund) உயர்த்துதல் | 22-23 |
| 13. | | | பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் (Multi-brand retail trade) அந்நிய முதலீட்டிற்கு (FDI) மறுப்பு | 23-24 |
| 14. | | | துறையின் கட்டடங்களில் சூரிய சக்தியினை ஊக்குவித்தல் | 24 |
| 15. | | | சரக்கு மற்றும் சேவை வரி (GST) | 25-28 |
| 16. | | | மத்திய விற்பனை வரி (CST) இழப்பீடு | 28-29 |
| 17. | | | மதிப்புக்கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்டதினால் ஏற்பட்ட வருவாய் இழப்பினை ஈடுசெய்தல் | 30 |
| 18. | | | தகவல் தொழில்நுட்பம் | 30-31 |
| | 18.1 | | முழுமையான கணினிமயமாக்கல் திட்டம் | 32 |
| | 18.2 | | இணையதளம் மூலம் / இணையதளம் வழியாக வங்கிகளில் நேரடியாக வரி செலுத்தும் வசதி | 32-34 |
| | 18.3 | | 'C' மற்றும் 'F' படிவங்களை இணையதளம் மூலம் பெற்றுக்கொள்ள வசதி | 34-35 |
| 19. | | | துறையின் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்துதல் | |
| | 19.1 | | சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 35-37 |
| | 19.2 | | சோதனைச் சாவடிகள் மற்றும் சோதனை முனையங்கள் நவீனமயமாக்கல் | 37 |
| | 19.3 | | பழைய வாகனங்களுக்கு பதில் புதிய வாகனங்கள் வழங்குதல் | 38 |
| 20. | | | 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் | 38 |
| 21. | | | 2013–2014–ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டங்கள் | 39 |

முன்னுரை

2012–2013–ஆம் ஆண்டில் வணிகவரித் துறையானது ரூ.47,885 கோடி மொத்த வருவாயினைத் திரட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டின் வருவாயைக் காட்டிலும், 21.09% வளர்ச்சியினை பதிவு செய்துள்ளது. இந்தியப் பொருளாதாரத்தில் நிலவிய பொதுவான மந்த நிலை மற்றும் மாநிலத்தில் நிலவி வந்த நலிந்த விவசாய காலத்திலும், சிறந்த முறையில் வரி வசூல் செய்யப்பட்டதன் காரணமாக இந்த வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. மாநில அரசுக்கு துறையானது அதிக அளவில் நிதி ஆதாரத்தினைத் திரட்டி தருவதோடு, மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கினை ஈட்டித் தருகிறது. 2013–2014–ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடுகளின்படியும், மாநிலத்தின் சொந்த வரி வருவாயான ரூ.86,065.40 கோடியில் வணிகவரித் துறையானது ரூ.56,025.24 கோடி வருவாயினை ஈட்டித் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது ஏறக்குறைய 65%-க்கு மேலாகும். இந்த ஆண்டின் வரவு செலவு திட்ட உரையில் எந்த புதிய வரி விதிப்போ அல்லது தற்போதுள்ள வரிவீதத்தில் அதிகரிப்போ செய்யக் கருதப்படாத நிலையில், துறையின் செயல்பாட்டுத் திறனை மேலும் செம்மைப்படுத்தியும், வரி ஏய்ப்பினைத் தடுத்தும், துறையானது இவ்வருவாய் இலக்கினை எய்திடும் என்பதில் உறுதியாக உள்ளது.

இந்தியாவின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், வரி நிர்வாகத்தில் தமிழ்நாடு பாரம்பரியமாக அதிக திறன் வாய்ந்துள்ளது என்பது மாநில

மொத்த உற்பத்தியுடன் (GSDP) ஒப்பிடுகையில் வசூலிக்கப்பட்ட அதிக வரியின் மூலம் பிரதிபலிக்கிறது. 2011–2012ல் மாநில மொத்த உற்பத்தியோடு தமிழ்நாட்டின் மொத்த வணிகவரிகள் வசூல் 6.79%-ஆக இருந்தது. இது 2012–2013–ஆம் ஆண்டில் 6.93%-ஆக வளர்ச்சியடைந்துள்ளது.

## 2. நிர்வாக அமைப்பு

ஒரு திடமான வரி வசூலிப்புக்கு நல்ல மற்றும் திறன் மிக்க ஆளுமையானது அவசியக் கூறாகிறது. வணிகவரி ஆணையரை நிர்வாகத் தலைமையாகக் கொண்டு மாநிலம் முழுவதும் பரந்துள்ள நன்கு இணைக்கப்பட்ட கட்டமைப்புடன் கூடிய சார்நிலை அலுவலகங்களால் இது சாத்தியமாகிறது. சென்னையை தலைமையிடமாகக் கொண்ட வணிகவரி ஆணையருக்கு உதவியாக நான்கு கூடுதல் ஆணையர்கள் உள்ளனர். வணிகப் பெருமக்களுடனான தொடர்பினை எளிமையாக்கிடவும், நிர்வாகத்தில் திறனை எய்திடவும், துறையானது பணிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டு, அதன் பல்வேறு பொறுப்புகளை கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு நான்கு வெவ்வேறு பிரிவுகள் மூலம் மேற்கொள்கிறது :

### 2.1 வரிவிதிப்புப் பிரிவு

மாநிலம் முழுவதும் அமைந்துள்ள 319 வரிவிதிப்பு வட்டங்கள் மாநிலத்தின் வரி வசூலுக்கு முதுகெலும்பாக திகழ்கின்றன. பதிவுச் சான்று வழங்குதல் முதல் வரி வசூலிப்பு செய்தல் வரையிலான பன்முக செயல்களை ஆற்றும் இந்த வரிவிதிப்பு வட்டங்களுக்கு, அந்தந்த



வட்டத்தின் பரப்பளவு மற்றும் வரிவிதிப்பில் கடினத்தன்மையினைப் பொறுத்து துணை ஆணையர்கள் / உதவி ஆணையர்கள் / வணிகவரி அலுவலர்கள் தலைமை வகிக்கின்றனர். இந்த வரிவிதிப்பு வட்டங்களின் செயல்பாடுகள் மீது மாவட்ட / சரக அளவில் உள்ள 40 நிர்வாக துணை ஆணையர்கள் மற்றும் கோட்ட அளவில் 10 இணை ஆணையர்கள் நேரடி கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை கொண்டுள்ளனர். துறையால் வசூலிக்கப்படும் வரியில் ஏறக்குறைய 55% அளவிற்கு வரி செலுத்தும் சென்னை மண்டலத்திலுள்ள 100 அதிக வரி செலுத்துவோர்களுக்கென சென்னையில் ஒரு அதிக வரி செலுத்துவோருக்கான பிரிவு உள்ளது. இப்பிரிவில், ஒரு இணை ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் நான்கு துணை ஆணையர்கள் வரிவிதிப்பு மற்றும் பிற சட்டரீதியான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### 2.2 தணிக்கைப் பிரிவு

தணிக்கை என்பது எந்த ஒரு வரி நிர்வாகத்திற்கும் உள்ளார்ந்த பகுதியாகும். ஏனெனில், சரியான வரித்தொகையைக் கண்டறிதல், வரிவிதிப்பில் ஏதேனும் தவறுகளைச் சுட்டிக்காட்டுதல் மற்றும் வரி ஏய்ப்பினைத் தடுத்தல் போன்றவற்றை தணிக்கையின் மூலம் கண்டறியலாம். ஆற்றல்மிக்க தணிக்கைக்கு ஒரு தெளிவான அணுகுமுறை மட்டுமின்றி, அறிவார்ந்த கண்ணோட்டம், திடமான தொழில்நுட்ப அறிவு, நல்ல முடிவெடுக்கும் திறன் மற்றும் கூர்ந்த வருவாய் உணர் திறன் ஆகியன தேவையானதாகும். துறையில் செயல்பட்டு வரும் உள் தணிக்கை குழுக்களிடம் இத்தகைய திறன்களை பதிய வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டம்

சரகத்திலும் ஒரு உதவி ஆணையர் மற்றும் ஒரு வணிகவரி அலுவலர் தலைமையில் ஒரு உள் தணிக்கைக் குழு உள்ளது. இந்த உள் தணிக்கைக் குழுக்கள் இணை ஆணையரால் வகுக்கப்படும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் தொடர்ச்சியான தணிக்கையினை மேற்கொள்கின்றன. இது தவிர, வரிவிதிப்பு வட்டங்களில் மாநிலக் கணக்காயரால் வருடாந்திர தணிக்கை தன்னிச்சையாகவும் மேற்கொள்ளப்படுகிறது. மாநிலக் கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தணிக்கைக் குறிப்புகள் வணிகவரி மற்றும் பதிவுத் துறை செயலாளர் அவர்களால் தொடர்ச்சியாக நடத்தப்படும் துறையளவிலான தணிக்கைக் குழுக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகின்றன. இக்கூட்டங்களில் வணிகவரி ஆணையர் மற்றும் மாநில கணக்காயர் அலுவலகத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

## 2.3 மேல்முறையீட்டு பிரிவு

வரிவிதிப்பு அலுவலரின் ஆணைக்கு எதிரான முதல் மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு துணை ஆணையர் / இணை ஆணையரிடம் உள்ளது. மாநிலத்தில் 20 மேல்முறையீட்டு துணை ஆணையர்களும், 2 மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் உள்ளனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளிடம் துறையின் வழக்குகளை முன்வைத்திடும் பொருட்டு, உதவி ஆணையர் பணித்தரத்தில் துறைப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர். முதல் முறையீட்டு அதிகார அமைப்பினால், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர் / இணை ஆணையரால் வழங்கப்படும் ஆணைக்கு எதிராக விற்பனை வரி மேல்முறையீட்டுத்



தீர்ப்பாயத்திடம் இரண்டாம் மேல்முறையீடு செய்யலாம். தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு சென்னையிலும், கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன. மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு, மாவட்ட நீதிபதி தரத்தில் தலைவரையும் மற்ற இரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இந்த இரு உறுப்பினர்களில், இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணி / வருமானவரித் துறை / மத்திய கலால் துறை அல்லது சுங்கத் துறை அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை ஆகியவற்றின் ஓர் அலுவலராகவோ / இந்திய பட்டயக் கணக்கர்கள் நிலையம் (Institute of Chartered Accountants) அல்லது இந்திய விலை மதிப்பீட்டு கணக்கர்கள் நிலையத்தின் (Institute of Cost and Works Accountants) ஓர் உறுப்பினராகவோ இருத்தல் வேண்டும்; மற்றொருவர் கூடுதல் ஆணையர் பணித்தரத்தில் உள்ள துறை உறுப்பினர் ஆவார். கூடுதல் அமர்வுகளில் சார்நிலை நீதிபதி தரத்தில் நீதித்துறை உறுப்பினர் ஒருவர் தலைமையிலும், மற்றொருவர் இணை ஆணையர் பணித்தரத்தில் கூடுதல் துறை உறுப்பினர் ஆவார். வழக்குகளில் துறையின் வாதத்தினை முன்வைத்திடும் பொருட்டு இணை ஆணையர் பணித்தரத்தில் ஒரு மாநிலப் பிரதிநிதியும், துணை ஆணையர் பணித்தரத்தில் ஒரு கூடுதல் மாநிலப் பிரதிநிதியும், முறையே முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில் வாதிடுவர்.

## 2.4 செயலாக்கப் பிரிவு

இந்தப்பிரிவு, மாநிலம் முழுவதும் எட்டு செயலாக்கக் கோட்டங்களையும், சென்னையில் ஒரு இடைமாநிலப் புலனாய்வுக் குழுவையும் கொண்டுள்ளது. இந்த செயலாக்கப் பிரிவுகள் மற்றும் இடைமாநிலப் புலனாய்வுக் குழு, இணை ஆணையர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. போக்குவரத்து வாகனங்களின் சோதனை மற்றும் வணிக இடங்களில் ஆய்வு / தணிக்கை மேற்கொண்டு, வரி ஏய்ப்பினைக் கட்டுப்படுத்துதல் செயலாக்கப் பிரிவின் முதன்மைப் பணியாகும். ஆந்திர பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநில எல்லைகளில் அமைந்துள்ள 28 சோதனைச் சாவடிகள், 8 சோதனை முனையங்கள் மற்றும் 55 சுற்றும் படைகள் மூலம் சரக்குகளின் இடைமாநில நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது. சோதனைச் சாவடிகளும் சோதனை முனையங்களும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்துள்ள போதிலும், சோதனைக்காக நடமாட்டத்தில் இருந்து வரும் சுற்றும் படைகளுக்கு சரக்குகளின் போக்குவரத்தை மேற்கொள்ளும் வணிகர்களது விவரங்களை உறுதி செய்வதற்கு கையடக்க கருவிகள் (Handheld terminals) போன்ற நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. வணிகம் நடைபெறும் இடங்களில் வரி ஏய்ப்பினைக் கண்டறிவதற்கு திடீர் ஆய்வுகள் மேற்கொள்ள செயலாக்கப் பிரிவில் கூடுதலாக குழுக்கள் உள்ளன. இதே குழு அலுவலர்கள், மதிப்புக்கூட்டு வரி தணிக்கையினையும் வணிகருக்கு முன்கூட்டியே தகவலளித்து அவர்கள் வணிகம் செய்யும் இடங்களில் மேற்கொள்வர்.



இணை ஆணையர் தலைமையிலான இடைமாநில புலனாய்வுக் குழுவானது இடைமாநில வணிகப் பரிவர்த்தனைகளில் வரி ஏய்ப்பினைக் கட்டுப்படுத்த, பிற மாநில அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், வரி ஏய்ப்பினைத் தடுப்பதற்கான மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்காக தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்கிறது. இக்குழுவானது மாநிலத்திற்கு உள்ளேயும் / வெளியேயுமான வரி ஏய்ப்பிற்குட்படும் பொருட்களின் நடமாட்டத்தினைக் குறிப்பாக கண்காணிக்கிறது.

## 3. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு

வணிகர்களால் தாக்கல் செய்யப்படும் நமூனாக்கள் மற்றும் பல்வேறு ஆதாரங்களிலிருந்து பெறப்படும் தகவல்களின் மூலம் துறையில் பல வகையான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. கொள்கை / நிர்வாக முடிவுகள் எடுப்பதற்கு இத்தகவல்களை பகுப்பாய்வு செய்தல் அவசியமாகிறது. இதற்கென, புள்ளியியல் துறை இணை இயக்குநர் தலைமையிலான புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. களத்திலிருந்து புள்ளி விவரத்தினை சேகரிக்க, கோட்ட அளவில் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் ஒருவரும், ஒவ்வொரு மண்டலம் / வணிகவரி மாவட்ட அளவில் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் உள்ளனர்.

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சி பிரிவால் கீழ்கண்ட அறிக்கைகள் / வெளியீடுகள் தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்றன:

1. ‘வணிகவரித் துறை – ஒரு கண்ணோட்டம்’ – ஆண்டுதோறும்

2. ‘வணிகவரித் துறையின் முக்கிய குறியீடுகள்’ – ஆண்டுதோறும்

3. ‘வணிகவரித் துறையின் புள்ளி விவரத்தொகுப்பு – காலமுறை அறிக்கை’ – ஆண்டுதோறும்

4. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் 100 பெரு வணிகர்களின் வருவாய் பகுப்பாய்வு – மாதந்தோறும்

5. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்த வருவாய் பகுப்பாய்வு – மாதந்தோறும்

6. சட்ட வாரியான மற்றும் கோட்ட வாரியான வருவாய் அறிக்கை – மாதந்தோறும்

7. கோட்டங்களின் செயல்பாடு குறித்த அறிக்கை – மாதந்தோறும்

8. வரி ஏய்ப்பிற்குட்பட்ட பொருட்கள் குறித்த அறிக்கைகள் – தேவைக்கேற்ப

9. விற்பனைப்பொருட்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வரி ஏய்ப்பினை மதிப்பீடு செய்தல் – தேவைக்கேற்ப



## 4. வணிகவரிப் பணியாளர் பயிற்சி மையம்

எந்த ஒரு வரிவிதிப்பும் உரிய சட்டம் ஒன்றின் அடிப்படையில் இருத்தல் வேண்டும். துறையானது பல்வேறு சட்டங்களை நிர்வகிக்கிறது. இச்சட்டங்களுக்கு விரிவான விதிகள் மற்றும் வழிமுறைகள் உள்ளன. மாறிவரும் வணிகச் சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கவும், அறிமுகப்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பங்களுக்கு ஏற்பவும் இந்த விதிகள் மற்றும் வழிமுறைகளில் திருத்தம் மேற்கொண்டு அவ்வப்போது மாற்றம் செய்யப்படுகிறது. துறையின் அலுவலர்களால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் மற்றும் அனைத்து திருத்தங்களிலும் அவர்கள் தேர்ந்து விளங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, 1982–ஆம் ஆண்டு முதல் சென்னையில் வணிகவரிப் பணியாளர் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையம் இணை ஆணையர் தலைமையில், துணை ஆணையர் / உதவி ஆணையர் பணித்தரத்தில் உள்ள அலுவலர்களை பயிற்றுநர்களாகக் கொண்டுள்ளது. வணிகவரித் துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்து அமைச்சுப் பணியாளர் முதல் மாநில பணித்தரத்தில் உள்ள அலுவலர்கள் வரை அனைவருக்கும் இப்பயிற்சி நிலையம் ‘பணியிடைப் பயிற்சி’ மற்றும் ‘புத்தாக்கப் பயிற்சி’ அளிக்கிறது. செயலாக்கம் மற்றும் வரிவிதிப்பு அலுவலர்களுக்கு வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய கோட்டத்தலைமையிடங்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. துறையின் செயல்பாடுகளில் தகவல் தொழில்நுட்பத்தின் உபயோகம் அதிகரித்துள்ளதால், துறையின் மென்பொருள் பயன்பாடுகளை உபயோகிப்பதில் பணியாளர்களுக்கு இம்மையம் பயிற்சி திட்டத்தினையும் மேற்கொள்கிறது.

## 5. துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வணிகவரித் துறையால் பின்வரும் சட்டங்கள் நிர்வகிக்கப்படுகிறது:

1. தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 (1.1.2007 முதல்)
2. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
3. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 (31.12.2006 வரை)
4. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970 (31.12.2006 வரை)
5. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
6. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
7. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
8. தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
9. தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001

   (சென்னை உயர்நீதிமன்றம் தனது 23.3.2007 நாளிட்ட தீர்ப்பின்படி இச்சட்டம் செல்லாது என ஆணையிட்டது. இதன் மீதான மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது)

10. தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம், 1983



## 6. வருவாய் வசூலின் போக்கு

வரி ஏய்ப்பினைத் தடுத்திட மேற்கொள்ளப்பட்ட சிறந்த கண்காணிப்பு மற்றும் தீவிரமான செயலாக்கத்தின் விளைவால், இந்தியப் பொருளாதாரத்தில் பொதுவான மந்த நிலை நிலவிய போதிலும், வருவாய் வசூலில் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியை துறை தக்க வைத்துள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில் துறையால் நிர்வகிக்கப்படும் அனைத்துச் சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் மற்றும் வளர்ச்சி வீத விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 2006–2007 | 19,217 | 15.66% |
| 2007–2008 | 19,952 | 03.83% |
| 2008–2009 | 22,570 | 13.12% |
| 2009–2010 | 24,819 | 09.96% |
| 2010–2011 | 31,117 | 25.37% |
| 2011–2012 | 39,545 | 27.09% |
| 2012–2013 | 47,885 | 21.09% |



86-9—2

## 7. கடந்த ஏழு ஆண்டுகளில் சட்ட வாரியான வருவாய்

கடந்த ஏழு ஆண்டுகளில் சட்டவாரியான வருவாய் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| | சட்டம் | 2006-2007 | 2007-2008 | 2008-2009 | 2009-2010 | 2010-2011 | 2011-2012 | 2012-2013 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம் | 2,290 | 16,472 | 19,440 | 21,477 | 26,558 | 33,997 | 42,038 |
| 2. | மத்திய விற்பனை வரிச் சட்டம் | 2,033 | 1,744 | 1,653 | 1,773 | 2,263 | 2,819 | 2,904 |
| 3. | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 13,416 | 429 | 293 | 218 | 350 | 259 | 261 |
| 4. | கேளிக்கை வரிச் சட்டம் | 25 | 16 | 12 | 13 | 16 | 59 | 70 |
| 5. | பந்தய வரிச் சட்டம் | 6 | 6 | 6 | 7 | 6 | 7 | 6 |
| 6. | ஆடம்பர வரிச் சட்டம் | 128 | 160 | 170 | 169 | 216 | 256 | 290 |
| 7. | நுழைவு வரிச் சட்டம் (வாகனம்) | 1,319 | 1,125 | 996 | 1,162 | 1,708 | 2,148 | 2,316 |
| | மொத்தம் | 19,217 | 19,952 | 22,570 | 24,819 | 31,117 | 39,545 | 47,885 |



## 8. வரி நிர்வாகத்திற்கான செலவு

கடந்த ஏழு ஆண்டுகளில் வணிகவரித் துறையின் வருவாய் வரவுகள் மற்றும் செலவு விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| | 2006–2007 | 2007–2008 | 2008–2009 | 2009–2010 | 2010–2011 | 2011–2012 | 2012–2013 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. வரவுகள் | 19,217 | 19,952 | 22,570 | 24,819 | 31,117 | 39,545 | 47,885 |
| 2. செலவுகள் | 128.52 | 143.73 | 187.27 | 205.10 | 196.45 | 224.05 | 214.93 |
| 3. வரவிற்கும் செலவிற்குமான விழுக்காடு | 0.79% | 0.72% | 0.83% | 0.83% | 0.63% | 0.57% | 0.45% |

## 9. வரி / மாநில மொத்த உற்பத்தியுடனான (GSDP) வருவாய் விகிதம்

தமிழ்நாடு தனது உத்வேகமான பொருளாதார வளர்ச்சியினால் மாநில மொத்த உற்பத்தியின் அடிப்படையில் இந்தியாவில் நான்காவது பெரிய மாநிலமாக விளங்குகிறது. வருவாய் வசூலானது மாநில மொத்த உற்பத்தியின் பின்னணியில் காண்கையில் அதன் ஆழம் (வரி வீதங்கள்) மற்றும் அகலத்தின் (வரி ஏய்ப்பினைத் தவிர்த்தல்) குறியீடாக செயல்படுகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் மாநிலத்தின் மொத்த உற்பத்தியுடன், துறையின் மொத்த வசூலினை ஒப்பிட்டு விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:



86-9—2a

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மொத்த வணிகவரி வசூல் | மாநிலத்தின் மொத்த உற்பத்தி | சதவீதம் *[(2)/(3) x 100]* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2006–2007 | 19,217 | 3,10,526 | 6.18% |
| 2007–2008 | 19,952 | 3,50,819 | 5.68% |
| 2008–2009 | 22,570 | 4,01,336 | 5.62% |
| 2009–2010 | 24,819 | 4,73,519 | 5.24% |
| 2010–2011 | 31,117 | 5,18,576 | 6.00% |
| 2011–2012 | 39,545 | 5,81,635 | 6.79% |
| 2012–2013 | 47,885 | 6,90,542 | 6.93% |

## 10. நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்கள்

வணிகம் மற்றும் தொழில் சார்ந்த பிரதிநிதிகளுடன் உள்ளூர் விவகாரங்கள் ஏதேனும் இருப்பின் அதனை உடனுக்குடன் விவாதித்து களைய மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் செயல்படும் மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் மட்டுமல்லாது, மாநிலம் முழுவதுமுள்ள வணிகம் மற்றும் தொழில் கூட்டமைப்புகளுடன் மாநில அளவில் நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்களை அரசு நடத்துகின்றது. 2011 முதல் இத்தகைய கூட்டங்கள்,



1.8.2011, 22.3.2012 மற்றும் 18.3.2013 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டுள்ளன. நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய இக்கூட்டங்கள் நிதித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மற்றும் முதன்மைச் செயலாளர், நிதி; செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை; வணிகவரி ஆணையர் மற்றும் வணிகவரித்துறையின் ஏனைய உயர் அலுவலர்கள் முன்னிலையில் நடத்தப்படுகின்றன. இக்கூட்டத்தின் போது வழங்கப்படும் ஒவ்வொரு ஆலோசனையும் விரிவாக ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இக்கூட்டத்தின் போது அளிக்கப்பட்ட கோரிக்கைகளின்படி வரிக்குறைப்பு / வரி விலக்கு வழங்கப்பட்டதுடன், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்திற்கு பின்வரும் முக்கிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

### 10.1 வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதுவதற்கு (Deemed Assessment) வழிவகை செய்தது

ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வணிகருக்கான வரிக்கணிப்பு ஆணையைக் கட்டாயம் பிறப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை கைவிடப்பட்டுள்ளது. வரி செலுத்தியதற்கான தகுந்த ஆதாரங்கள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் உரிய படிவத்தில் நமூனாக்கள் வணிகரால் சமர்ப்பிக்கப்பட்டால், அதைத் தொடர்ந்து வரும் ஆண்டின் அக்டோபர் மாதம் 31–ஆம் தேதியன்று அவர் வரிக்கணிப்பு செய்யப்பட்டதாக கருதப்படுவார். இந்த நடைமுறை 19.6.2012 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## 10.2 தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பினை நிறுவியது

வரிவீதம் தொடர்பான கூறு எதனையும் தெளிவாக்குவதற்கு தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பினை மாநில அளவில் அரசு நிறுவியுள்ளது. வணிகவரி ஆணையர், கூடுதல் ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் கூடுதல் ஆணையர் (சீராய்வு மனு) ஆகியோரைக் கொண்ட இந்த அதிகார அமைப்பு, தனது செயல்பாட்டினை 31.10.2011 முதல் துவங்கியுள்ளது.

## 10.3 சிறு வணிகர்கள் உள்ளீட்டு வரி வரவினைப் (Input Tax Credit) பெறுவதற்கு வழிவகை செய்தது

குறித்துரைக்கப்பட்ட வரிவிதிப்பு வரம்பினை கடந்திடலாம் என எதிர்பார்த்து வரி வசூலிக்கப்பட்டு, அவ்வரம்பினை கடக்காமல் இருக்கும் பதிவு பெற்ற சிறு வணிகர்களுக்கு உள்ளீட்டு வரி வரவு கிடைத்திடும் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், இத்தகைய சிறு வணிகர்களால் வசூலிக்கப்பட்ட வரியானது, உள்ளீட்டு வரி வரவு எடுத்துக் கொள்வதற்கான பயனின்றி இழக்க நேரிட்டது. இந்த நடைமுறை 1.4.2012 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



## 10.4 இணக்க வரி (Compounding Tax) செலுத்தும் முறையிலுள்ள முரண்பாட்டைக் களைந்தது

இணக்க வரி செலுத்தும் முறையின் கீழ் வரி செலுத்தும் வணிகரின் வரிவிதிக்கத்தக்க பொருட்கள் தொடர்பான விற்பனைத்தொகையானது, அந்த ஆண்டில் எப்பொழுது ஐம்பது இலட்சம் ரூபாய் என்ற அளவை எட்டுகின்றதோ, அத்தகைய வணிகர் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட அவருடைய வரிவிதிக்கத்தக்க விற்பனைத்தொகையின் மீது மட்டும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வரிவீதங்களின்படி வரி செலுத்தினால் போதுமானது என்று அரசு சட்டத்திருத்தத்தினை மேற்கொண்டுள்ளது. இதற்கு முன்னர், வணிகர் தனது மொத்த வரிவிதிக்கத்தக்க விற்பனைத்தொகையின் மீது அட்டவணை வரிவீதங்களின்படி வரி செலுத்த வேண்டியிருந்தது. இந்த நடைமுறை 1.4.2012 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## 10.5 துணை வணிகவரி அலுவலர்களின் வரிவிதிப்பு அதிகார வரம்பினை உயர்த்தியது

5.9.2011 முதல் துணை வணிகவரி அலுவலர்களின் வரிவிதிப்பிற்கான அதிகார வரம்பு, ஆண்டு மொத்த விற்பனைத்தொகை ரூ.75 இலட்சத்திற்கு மிகாமல் (வரி விலக்களிக்கப்பட்ட இனங்கள் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழான விற்பனைத்தொகை உட்பட), ஆனால் ஆண்டு மொத்த வரித்தொகை ரூ.75,000/–க்கு உட்பட்டு இருக்கும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதற்கு

முன்னர், இந்த வரம்பானது ரூ.20 இலட்சம் மற்றும் ரூ.30,000/– என முறையே இருந்து வந்தது.

## 11. வரி விலக்குகள் / குறைப்புகள் மற்றும் சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள்

### 11.1 வரி விலக்குகள் / குறைப்புகள்

#### 11.1.1 ஜென்செட்டுகள் மீதான வரிவீதத்தில் குறைப்பு

ஜெனரேட்டர்கள் மீதான வரிவீதத்தை 1.4.2008 முதல் குறைத்த போதிலும் (11.7.2011 வரை 4% மற்றும் அதன் பிறகு 5%), ஜென்செட்டுகளின் மீதான உயர்ந்த வரிவீதம் தொடர்ந்தது (11.7.2011 வரை 12.5% மற்றும் அதன் பிறகு 14.5%). இது தொழில் முனைவோர்களுக்கு இடர்பாடு ஏற்படுத்தியதோடு, இப்பொருட்களின் தவறான வகைப்பாட்டிற்கும் வழி வகுத்தது. இந்த வேறுபாட்டினைக் களையவும், மின் சக்தியினை பெருக்கிடவும் ஜென்செட்டுகள் மீதான வரிவீதத்தை 7.12.2012 முதல் 14.5%-லிருந்து 5%-ஆக அரசு குறைத்துள்ளது.

#### 11.1.2. உயரழுத்த மின் நுகர்வோர்கள் (HT Consumers) பயன்படுத்தும் எரி உலை எண்ணெய் (Furnace oil) மீது வரி விலக்கு

பொதுவாக, எரி உலை எண்ணெய் மீது 5% மதிப்புக்கூட்டு வரி விதிக்கப்படுகிறது. மின் சக்தி உற்பத்திக்கு எரி உலை எண்ணெயினைப் பயன்படுத்திடும் உயரழுத்த மின் நுகர்வோர்களுக்கு நிவாரணம் வழங்கிடும் பொருட்டு, 1.2.2012 முதல் 30.9.2012 வரையிலான காலத்திற்கு உயரழுத்த மின் நுகர்வோர்களால் ஜென்செட்டுகளில் பயன்படுத்தப்பட்ட எரி உலை எண்ணெயின் விற்பனைக்கு மதிப்புக்கூட்டு வரி செலுத்துவதிலிருந்து அரசு விலக்களித்தது. இந்த வரி விலக்கானது 1.10.2012 முதல் 31.5.2013 வரையிலான காலத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு இந்நடவடிக்கையின் மூலம் அரசு ரூ.97 கோடி வருவாயினை இழந்துள்ளது.



#### 11.1.3 மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களுக்கு (Battery Operated Motorised Retrofitted Scooters) வரி விலக்கு

பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களின் மீது 14.5% வரி விதிக்கப்பட்டு வந்தது. மாற்றுத்திறனாளிகளின் இடம் பெயரும் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு, பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களின் விற்பனையின் மீது செலுத்த வேண்டிய மதிப்புக்கூட்டு வரிக்கு 14.12.2012 முதல் அரசு விலக்களித்துள்ளது.

### 11.2 சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள்

#### 11.2.1 வர்த்தகப் புலனாய்வுப் பிரிவு (Business Intelligence Unit)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வணிகவரி ஆணையரின்

அலுவலகத்தில் அவருடைய நேரடி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டில் வர்த்தகப் புலனாய்வு பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஒரு துணை ஆணையர், ஐந்து உதவி ஆணையர்கள், ஒரு துணை கணினி நிரலர், ஒரு உதவி கணினி நிரலர் மற்றும் ஒரு புள்ளியியல் ஆய்வாளர் ஆகியோரைக் கொண்டு இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. வணிகர்களின் நமூனாக்கள், துறையின் சோதனைச் சாவடிகள், மத்திய மற்றும் பிற மாநில அரசுகளின் முகமைகள் போன்றவைகளிடமிருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு இந்தப் பிரிவானது தகவல் தொழில்நுட்பத்தைப் பெருமளவில் உபயோகித்து கூர்ந்தாய்வு செய்கிறது. வரி ஏய்ப்பிற்குட்படும் பொருட்கள், வழக்கத்திற்கு மாறான உள்ளீட்டு வரி வரவு (ITC) மற்றும் வரி திரும்பப் பெறுதல் தொடர்பான கோரிக்கைகள், அசாதாரண வெளிமாநில இருப்பு மாற்றம் (Stock transfer) போன்ற நேர்வுகளில் இப்பிரிவு சிறப்புக் கவனம் செலுத்துகிறது.

### 11.2.2 பட்டயக்கணக்கர் (Chartered Accountant) / விலை மதிப்பீட்டுக்கணக்கர் (Cost Accountant) கொண்டு தணிக்கை செய்தல்

துறையுடனான வணிகப் பெருமக்களின் தொடர்பினை எளிதாக்கும் பொருட்டு, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தின் பிரிவு 22(2)–க்கு அரசால் திருத்தம் கொண்டு வரப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும், ஒவ்வொரு வணிகருக்கும் வரிக்கணிப்பு ஆணை வரிவிதிப்பு அலுவலரால் கட்டாயம் பிறப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை கைவிடப்பட்டுள்ளது. தேவையான



ஆவணங்களை இணைத்து சரியான முறையில் நமூனாக்களை தாக்கல் செய்திருந்து, நமூனாக்களின்படி உரிய வரியினை செலுத்தியிருந்தால், அந்தத் தொடரும் ஆண்டின் அக்டோபர் மாதம் 31–ஆம் தேதியன்று வணிகர் வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் தற்போது கருதப்படுவார்.

இந்த வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும் முறையில் வணிகர்களால் சமர்ப்பிக்கப்படும் கணக்குகள் சரியானவையா என்பதை உறுதி செய்வது அவசியமாகிறது. இதற்காக, வணிகரின் கணக்குகளை ஒரு பட்டயக்கணக்கர் (Chartered Accountant) அல்லது ஒரு விலை மதிப்பீட்டுக்கணக்கரைக் (Cost Accountant) கொண்டு தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்வதற்கு, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தில் பிரிவு 63–A என்னும் பிரிவினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. சிறு மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் களைவதற்கு, வணிகர் ஒருவரின் பூஜ்யவீத விற்பனை மற்றும் மாநிலங்களுக்கிடையேயான விற்பனை உள்ளடங்களான மொத்த விற்பனைத்தொகையானது, ஆண்டு ஒன்றில் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படும் நேர்வுகளில் மட்டுமே இந்த முறை பொருந்தும் என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, கேரளா, மகாராஷ்ட்ரா, குஜராத் போன்ற பிற மாநிலங்களின் மதிப்புக்கூட்டு வரிச்சட்டங்களில் இதே போன்ற வழிமுறை உள்ளது.

## 12. தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் தொகுப்பு நிதியை (Corpus fund) உயர்த்துதல்

தமிழ்நாடு வணிகர் நல வாரியம், மறைந்த உறுப்பினரின் குடும்பத்தாருக்கு உதவி; இருதய மாற்றுவழி அறுவை சிகிச்சை (bypass surgery), சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை (kidney transplantation), புற்றுநோய்க்கான வேதிச்சிகிச்சை (chemotherapy), டயாலிசிஸ் போன்றவைக்கு மருத்துவ உதவித்தொகை; குழந்தைகளுக்கான கல்லூரிப் படிப்புகள் போன்றவைக்கு கல்வி உதவித்தொகை போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள், வாரியத்தின் தொகுப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டி மற்றும் உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஒரு முறை செலுத்தக்கூடிய சந்தாத்தொகைக்கு இணையான அரசு மானியத்தைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன. உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணமாக ஆண்டுதோறும் ரூ.100/– செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெறாத, தொழில் வரி உச்ச வரம்புக்கு கீழே உள்ள சிறு வணிகர்களும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெற்ற உரிய உரிமத்தின் அடிப்படையில் இவ்வாரியத்தில் உறுப்பினர் ஆகலாம் என்று வழிவகை செய்தும் அரசாணை (நிலை) எண்.69, நாள் 29.6.2011–ல் ஆணையிடப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது.



வாரியத்தின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்திடும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தொகுப்பு நிதி ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்படும் என அறிவித்ததற்கிணங்க அரசாணை (நிலை) எண்.129, நாள் 4.10.2012–ல் இதற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 13. பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் (Multi-brand retail trade) அந்நிய முதலீட்டிற்கு (FDI) மறுப்பு

2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் 51% அந்நிய முதலீட்டை மத்திய அரசு 2012–ஆம் ஆண்டில் அனுமதித்தது. பெரிய பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிட இயலாத சிறிய மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு இது எதிர்விளைவை ஏற்படுத்திடும். இந்த வர்த்தகத்துறையானது, கணிசமான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி வருவதால், மத்திய அரசின் இந்த முடிவிற்கு தமிழக அரசு தனது பலமான எதிர்ப்பினை பதிவு செய்தது. மத்திய அரசு இந்த முடிவினை உடனே கைவிட வேண்டும் என்றும், மாநிலத்தில் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டினை தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிபட தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களின் பலமான எதிர்ப்பின் காரணமாக, மத்திய அரசு தனது நிலையினை மாற்றிட நேரிட்டு, மாநிலத்தில் பல்பொருள் சில்லறை

வர்த்தகத்தில் அந்நிய முதலீடு, சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஒப்புதலின்றி அனுமதிக்கப்படமாட்டாது என தெரிவித்தது. அதற்கிணங்க, மாநிலத்தில் பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டிற்கு தமிழக அரசு தனது ஒப்புதலை வழங்கவில்லை என்பதால், கணிசமான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**14. துறையின் கட்டடங்களில் சூரிய சக்தியினை ஊக்குவித்தல்**

2015–ஆம் ஆண்டுக்குள் சூரிய சக்தியின் மூலம் 3000 மெகாவாட் மின்சாரத்திறனை எட்டி, உலக அளவில் தமிழ்நாடு தலைசிறந்து திகழ வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டமாகும். இந்த இலக்கினை எய்தும் நோக்கில் "தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2012"–னை அரசு வெளியிட்டுள்ளது. அரசளவில் சூரிய மேற்கூரை முறைகளை (Solar Rooftop Systems) ஊக்குவிக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இந்தக் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ளன. இக்கொள்கைக்கு இணங்க வணிகவரித்துறையில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்கள் அனைத்திற்கும் சூரிய மேற்கூரைகள் பொருத்தப்படும். துறையில் தற்போதுள்ள 41 அரசு கட்டடங்களுக்கு சூரிய மேற்கூரை முறைகள் படிப்படியாக பொருத்தப்படும். இது தற்போது செலுத்தப்பட்டு வரும் ஆண்டொன்றுக்கான மின்சாரக் கட்டணமான ரூ.1.55 கோடியினை குறைத்திட உதவும்.



**15. சரக்கு மற்றும் சேவை வரி (GST)**

2007–2008–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்கையில், சரக்கு மற்றும் சேவை வரி (GST) வடிவிலான முக்கிய வரிச்சீர்திருத்தத்தினை நாட்டில் அறிமுகப்படுத்துவதற்கான வரைபடத்தினை மத்திய நிதியமைச்சர் அறிவித்து, 1.4.2010 முதல் சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைக்கு கொண்டு வரப்படும் எனக் குறிப்பிட்டார். மதிப்புக்கூட்டு வரியினை அமல்படுத்துவது தொடர்பான பணியினை மேற்பார்வையிட்டு வந்த மாநில நிதி / வரி அமைச்சர்கள் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட குழுவிடம் (Empowered Committee) இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரியினை அறிமுகப்படுத்துவதற்கான வரைபடத்தினை தயாரிக்கும்படி கேட்டுக்கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்தார். அதற்கிணங்க, அதிகாரமளிக்கப்பட்ட குழு கடந்த சில வருடங்களாக சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான பொருண்மைகள் குறித்து மத்திய அரசின் நிதியமைச்சகத்துடன் பணியாற்றி வருகிறது.

தற்போது, சேவைகள் மீதும் சரக்குகளின் உற்பத்தியின் மீதும் வரிவிதிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. அதே சமயம், சரக்குகளின் விற்பனை மீது வரிவிதிக்கும் அதிகாரம் மாநில அரசுகளிடம் உள்ளது. உள்ளீட்டு வரி வரவு பெறுவதற்கான வசதி மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வகைப்பாட்டிற்கும் வழங்கப்பட்டுள்ளது. சரக்குகளின் விநியோகம் மற்றும் சேவைகளின் மீது மத்திய அரசும் மாநில அரசும் இணையாக வரிவிதித்திட சரக்கு மற்றும் சேவை வரி கருதுகிறது. இதற்காக, கடந்த மார்ச் 2011–ல்

மக்களவையில் அரசியலமைப்பு திருத்தச் சட்டமுன்வடிவு (115–வது சட்டத்திருத்தம்) அறிமுகப்படுத்தப்பட்டு, நிதி சம்பந்தப்பட்ட பாராளுமன்ற நிலைக்குழுவால் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த திருத்தச் சட்டமுன்வடிவில், சரக்கு மற்றும் சேவை வரியில் கீழ்க்காணும் மத்திய / மாநில வரிகள் மற்றும் இதர வரிகளை உள்ளடக்குவதற்கான (subsume) கூறுகள் உள்ளன:

(அ) மத்திய அரசு

(1) கலால் தீர்வைகள் (Excise Duties)

(2) சேவை வரி

(3) கூடுதல் சுங்கத் தீர்வை (CVD என அழைக்கப்படும்) (Additional Customs Duty)

(4) சுங்கத்திற்கான சிறப்பு கூடுதல் தீர்வை

(5) மிகு வரிகள் மற்றும் மேல் வரிகள் (Surcharges and Cesses)

(ஆ) மாநில அரசுகள்

(1) மதிப்புக் கூட்டு வரி / விற்பனை வரி

(2) கேளிக்கைகள் வரி (உள்ளாட்சி அமைப்புகளால் விதிக்கப்படாதவை)

(3) ஆடம்பர வரி

(4) பரிசுச்சீட்டு, பந்தயம் மற்றும் சூதாட்டத்தின் மீதான வரிகள்

(5) மிகு வரிகள் மற்றும் மேல் வரிகள்

(6) ஆக்ட்ராய்க்கு பதிலாக இல்லாத நுழைவு வரி



பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் மனித நுகர்விற்காக பயன்படுத்தப்படும் மதுபானங்கள், சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பிற்கு உட்படுத்தப்படாது என இந்த திருத்தச் சட்டமுன்வடிவு கருதுகிறது. புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்கள், சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பிற்கு உட்படுத்தப்படும் என்ற போதிலும், அவைகள் மீது சரக்கு மற்றும் சேவை வரிக்கும் கூடுதலாக கலால் வரியினை விதிக்க மத்திய அரசுக்கு இந்த சட்டமுன்வடிவு வழிவகுக்கிறது. ஆனால், இவ்வாறான அதிகாரம் மாநில அரசுகளுக்கு வழங்கப்படவில்லை.

பொருளாதாரத்தை ஊக்குவிக்கும், சாதாரண மனிதனுக்கு பயனளிக்கும் எந்த ஒரு வரி சீர்திருத்தத்தினையும் தமிழ்நாடு அரசு வரவேற்கும் என்றாலும் கூட, இதை செயல்படுத்திடும்போது அரசியலமைப்பில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் நிதி தன்னாட்சியினை ஆக்கிரமிக்கக்கூடாது என்று உறுதி செய்வதை கவனித்திடல் வேண்டும்.

இந்த திருத்தச் சட்டமுன்வடிவின் சில கூறுகள் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரியில் உத்தேசிக்கப்பட்டுள்ள அமைப்பு தொடர்பாக தமிழ்நாடு அரசுக்கு உள்ள சில ஆட்சேபனைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடிதம் வாயிலாக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த ஆட்சேபனைகள், நிதி தொடர்பான பாராளுமன்ற நிலைக் குழுவிடம் மற்றும் மத்திய நிதியமைச்சருடனான கூட்டங்கள் மற்றும்

அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் நடத்தப்படும் தொடர் கூட்டங்களிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## 16. மத்திய விற்பனை வரி (CST) இழப்பீடு

மத்திய விற்பனை வரியானது சரக்குகளின் இடைமாநில நடமாட்டத்தின் மீது 1956–ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வரியாகும். நாடு முழுவதும் ஒன்று சேர்ந்த சந்தையை கொண்டிருக்க வேண்டும் என சரக்கு மற்றும் சேவை வரி கருதுவதால், மத்திய விற்பனை விரி விதிப்பு என்பது சரக்கு மற்றும் சேவை வரியின் அடிப்படைத் தத்துவத்திற்கு எதிரான ஒன்றாகும். ஆகையால், 1.4.2010 முதல் சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான வரைபடத்தினை கோடிட்டு காட்டுகையில், மத்திய விற்பனை வரி படிப்படியாகக் குறைக்கப்படும் என்றும் சரக்கு மற்றும் சேவை வரியினை அறிமுகப்படுத்தும்போது இது முற்றிலும் அகற்றப்படும் என்றும் மத்திய நிதியமைச்சர் தெரிவித்தார். இந்த அறிவிப்பின்படி, 1.4.2007 முதல் மத்திய விற்பனை வரிவீதம் 4%-லிருந்து 3%-ஆகவும், மற்றும் 1.6.2008 முதல் 3%-லிருந்து 2%-ஆகவும் குறைக்கப்பட்டது. மத்திய விற்பனை வரிவீதத்தினை குறைத்ததினால் ஏற்பட்ட வரி இழப்பு, மாநிலங்களுக்கு ஈடு செய்யப்படும் என மத்திய அரசு உறுதியளித்தது. அதற்கிணங்க, மூன்றாண்டு காலத்திற்கு (2007–08 முதல் 2009–10 வரை) தமிழ்நாடு அரசால் கோரப்பட்ட இழப்பீட்டுத்தொகையான ரூ.4188.38 கோடியில், மத்திய அரசால் ரூ.2577.58 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1.4.2010 முதல் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்படாததால், 2010–11–ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு கோரிய இழப்பீட்டுத் தொகையான ரூ.2309.24 கோடியில், ரூ.58.92 கோடி மட்டுமே வழங்கப்பட்டது. அந்த ஆண்டின்போது, குறைந்தபட்ச மதிப்புக்கூட்டு வரிவீதம் 4%-லிருந்து 5%-ஆக உயர்த்தப்படாததை காரணங்காட்டி (இது இழப்பீடு வழங்குவதற்கான வழிமுறைகள் எதனிலும் குறிப்பிடப்படாத ஒரு நிபந்தனையாகும்), மத்திய அரசு ரூ.2000 கோடிக்கும் அதிகமாக இழப்பீட்டிலிருந்து கழித்துள்ளது. தமிழ்நாடு அரசுடன் பிற மாநில அரசுகளும் சேர்ந்து மத்திய நிதியமைச்சகத்திடம் இப்பொருண்மையினை அழுத்தமாக எடுத்துரைத்ததன் அடிப்படையில், இதனை பரிசீலிக்க ஒரு கூட்டுக்குழு அமைக்கப்பட்டது. உரிய ஆழ்ந்தாராய்விற்குப்பின், இந்தக்குழுவானது 2010–11–ஆம் ஆண்டிற்கு குறைந்தபட்ச மதிப்புக்கூட்டு வரிவீதத்தினை அதிகரிக்காததை காரணங்காட்டி குறைப்பு ஏதும் மேற்கொள்ளாமல் 100% இழப்பீட்டினை வழங்க வேண்டும் என்றும், 2011–12 மற்றும் 2012–13 ஆகிய ஆண்டுகளுக்கான இழப்பீட்டினை 75% மற்றும் 50% என முறையே வழங்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளது. இந்த பரிந்துரைக்கு மத்திய அரசு ஒப்புக்கொள்வதாக தெரிகிறது. இது தொடர்பாக ஆணைகள் விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு, மற்ற பல மாநிலங்களோடு சேர்ந்து சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைக்கு கொண்டு வரப்படும் வரை மத்திய விற்பனை வரி இழப்பீட்டுத்தொகையினை வழங்கிட வேண்டும் என மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளது.

## 17. மதிப்புக்கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்டதினால் ஏற்பட்ட வருவாய் இழப்பினை ஈடுசெய்தல்

மதிப்புக்கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்டதினால் ஏற்பட்ட இழப்பீட்டினை ஈடுசெய்வதற்கென, 2007 மற்றும் 2008–ஆம் ஆங்கில ஆண்டுகளுக்கு 75% மற்றும் 50% என முறையே இழப்பீடு வழங்க மத்திய அரசு ஒப்புக்கொண்டது. அதன்படி, ஜனவரி 2007 முதல் டிசம்பர் 2008 வரையுள்ள காலத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.4011.80 கோடி கோரப்பட்டு, அதில் இதுவரை ரூ.3361.36 கோடி மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய மீதமுள்ள இழப்பீட்டுத்தொகையான ரூ.650.44 கோடியினைப் பெறுவதற்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 18. தகவல் தொழில்நுட்பம்

அரசு தகவல் மையத்தின் உதவியுடன் வணிகவரித்துறையின் கணினிமயமாக்கல் 1973–ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. பின்னர், 1988–ஆம் ஆண்டில் வணிகவரித்துறையானது தனக்கென ஒரு தகவல் மையத்தினை அமைத்து, மாநிலம் முழுவதிலும் இருந்து பெறப்படும் மாதாந்திர நமூனாக்களை இத்தகவல் தொகுப்பு மையத்தில் உட்புகுத்தி, பரிசீலினை செய்து மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை (MIS Reports) தயார் செய்தது.

2003–ஆம் ஆண்டில் துறையால் கள அலுவலகங்களின் கணினிமயமாக்கல் பெருமளவில்



தொடங்கப்பட்டது. இதன் மூலம் சென்னையிலுள்ள மைய சேவையகத்துக்கு (Central Server) தகவல்கள் வழங்குவதற்காக துறை அலுவலகங்களுக்கு கணினிகள் மற்றும் அதனுடனான இணைப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டன.

தற்போது, துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் கணினிகள் மற்றும் பன்செயல் கருவிகள் (Multi-function devices) உட்பட புறக்கருவிகளும் (Peripherals) வழங்கப்பட்டுள்ளன. துறையின் அலுவலகங்கள் அமைந்துள்ள 215 இடங்களும் அந்தந்த அலுவலகங்களுக்கு அருகாமையிலுள்ள தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் (TNSWAN) இருப்பு முனையின் (Point of Presence) மூலம் 2 Mbps வழித்தடங்களால் இணைக்கப்பட்டு, துறைக்கான பெரியதொரு பெரும்பரப்பு வலையமைப்பு (Wide Area Network) உருவாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மின்னணு வழி சேவைகளை வணிகப்பெருமக்கள் உபயோகப்படுத்திட துறையானது www.tnvat.gov.in என்ற சொந்த வலைதளத்தினை கொண்டுள்ளது. மேலும் கூடுதலாக, பல்வேறு மென்பொருள் பிரிவுகளை உபயோகப்படுத்துவதற்கும், துறையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பல்வேறு மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை அனைத்து துறை அலுவலர்களும் காண்பதற்கும் ஏதுவாக துறையானது www.tnct.gov.in என்ற உள் வலை தளத்தினை (Intranet) கொண்டுள்ளது.

## 18.1 முழுமையான கணினிமயமாக்கல் திட்டம் (End to End Computerisation Project)

துறையின் மின் ஆளுமையினை அடுத்த கட்ட நிலைக்கு கொண்டு செல்லும் நோக்கில், முழுமையான கணினிமயமாக்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு என அரசு ரூ.230.96 கோடி ஒப்பளித்துள்ளது. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான ஆவணங்களைத் தயாரிப்பதற்கு துறைக்கு உதவி புரிந்த ஆலோசகரான திருவாளர்கள் அக்செஞ்சர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் இந்த கணினிமயமாக்கலுக்கான விரிவான திட்ட அறிக்கையினை (Detailed Project Report) தயார் செய்தது. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு, ஏலம் கேட்பவர்களிடமிருந்து பெறப்பட்ட தொழில்நுட்ப ஏல மனுக்கள் தொழில்நுட்ப குழுவினால் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்தத் தேவையான கணினி ஒருங்கிணைப்பாளரை (System Integrator) நியமிப்பதற்கு ஆணைகள் விரைவில் வெளியிடப்படும்.

## 18.2 இணையதளம் மூலம் (online) / இணையதளம் வழியாக வங்கிகளில் நேரடியாக வரி செலுத்தும் வசதி (offline)

தகவல் தொழில்நுட்பவியலின் பயன்பாட்டினை அதிகரிப்பதன் மூலம் வணிகர்களுடனான தொடர்பினை ஊக்குவிப்பது என்ற துறையின் கொள்கைக்கு இணங்க, கடந்த இரண்டு ஆண்டுகளில் மின்னணு வழி வரி செலுத்தும் வசதியினை வழங்கிடும் பொருட்டு கூடுதலாக வங்கிகள் சேர்க்கப்பட்டுள்ளன. முன்னர், இந்த மின்னணு வழி வரி செலுத்தும் வசதியினை வழங்கிட 5 வங்கிகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், தற்போது இதற்காக கூடுதலாக 21 வங்கிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனை தவிர, அரசாணை (நிலை) எண்.39, நாள் 9.4.2013–ன்படி ஏற்கெனவே இணையதளம் வழியாக வரி வசூல் செய்ய அங்கீகரிக்கப்பட்ட 19 பொதுத்துறை வங்கிகளில், தற்போது இணையதள வழியாக அவ்வங்கிகளுக்கு நேரடியாக சென்று வரி செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசின், நிதியமைச்சகத்தின் வழிகாட்டுதலுக்கிணங்க, தனியார் வங்கிகளுக்கு இந்த வசதி ஏற்படுத்தப்படவில்லை என்றாலும், வரி செலுத்துவதில் கூடுதல் வாய்ப்புகளை வணிகர்களுக்கு வழங்கிட ஏதுவாக இந்த விவகாரத்தினை அமைச்சகத்திடமும், இந்திய ரிசர்வ் வங்கியிடமும் எடுத்துச் செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்வேறு காரணங்களினால், பெரும்பாலான நடுத்தர மற்றும் சிறு வணிகர்கள் மின்னணு வழி வரி செலுத்தும் வசதியினை பயன்படுத்துவதில்லை. இந்த இணையதள வழியாக வங்கிகளுக்கு நேரடியாக சென்று வரி செலுத்தும் வசதியானது, வணிகர் மாதாந்திர நமூனாக்களை மின்னணு வழியில் தாக்கல் செய்து, மின்னணு ரசீதை பெற்று, பின்னர் வங்கிக் கிளைக்கு நேரடியாக சென்று வரி செலுத்திடும் வாய்ப்பினை வழங்குகிறது. இதற்காக வணிகவரி அலுவலகத்திற்கு வணிகர் நேரடியாக வர வேண்டிய தேவையினை இந்த வசதியானது முழுவதும் அகற்றுகிறது. இந்த வசதியினை விரைவில் நடைமுறைக்கு கொண்டு வர ஏதுவாக தேவையான

மென்பொருளினை வடிவமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**18.3 'C' மற்றும் 'F' படிவங்களை இணையதளம் மூலம் பெற்றுக்கொள்ள வசதி**

மாநிலத்தில் உள்ள விற்பனை செய்யும் வணிகர், பிற மாநிலத்தில் உள்ள கொள்முதல் செய்யும் வணிகரிடமிருந்து அவருடைய விற்பனைக்கு 'C' படிவத்தினைப் பெற்று வழங்கிடும் பட்சத்தில் பொருட்களின் இடைமாநில விற்பனை மீது 2% சலுகை வீதத்தில் 1956–ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழ், வரி வசூலிக்கப்படுகிறது. அப்படிவங்கள் இல்லாத நிலையில், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தின் கீழ் மாநிலத்தில் உள்ள வரிவீதத்தின்படி வரி வசூலிக்கப்படும். அதே போல் பொருட்களை கொள்முதல் செய்யும்போது, தமிழ்நாட்டில் உள்ள கொள்முதல் செய்யும் வணிகர் ஒருவர் பிற மாநில வணிகருக்கு 2% மத்திய விற்பனை வரிவீத சலுகையினை பெறும் வகையில் 'C' படிவத்தினை வழங்கிட வேண்டும். பிற மாநிலத்திற்கு இருப்பு மாற்றம் (stock transfer) அல்லது முகவர் மூலமாக (agency sale) பொருட்களை கொண்டு செல்லும் வணிகர் ஒருவர், அவருடைய வரிவிதிப்பு அலுவலரிடம் 'F' படிவத்தினை வழங்கிட வேண்டும்; இல்லையெனில், அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு உரியவாறு வரி விதிக்கப்படும். தமிழ்நாட்டில் முன்பு 'C' மற்றும் 'F' படிவங்கள் காகித வடிவில் மட்டுமே கிடைக்கப்பெற்று,



வணிகர் அதனை சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலரிடமிருந்து பெற வேண்டியிருந்தது. சில நேரங்களில், அச்சடிக்கப்பட்ட படிவங்கள் போதிய அளவு விநியோகிக்கபடாமை மற்றும் படிவங்கள் வழங்குவதில் தாமதம் போன்றவையால் வணிகர்கள் இன்னலைச் சந்தித்தினர். இந்த நிலையை நிவர்த்தி செய்திடும் நோக்கில் 1.11.2012 முதல் 'C' மற்றும் 'F' படிவுங்களை இணையதளம் மூலம் பெற்றுக் கொள்ளும் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**19. துறையின் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்துதல்**

**19.1 சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்**

2011–12–ம் ஆண்டில் ரூ.20.15 கோடி செலவில் 34 அலுவலகங்களுக்கு 15 கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இந்த கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் தற்போது பல்வேறு நிலைகளில் உள்ளன. 2012–13–ம் ஆண்டில் ரூ.11.18 கோடி செலவில் 16 வணிகவரி அலுவலகங்களுக்கு கீழ்க்காணும் 10 இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண்.4, நாள் 22.1.2013–ல் அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண். | கோட்டம் | அலுவலகங்களின் விவரம் | | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | இராணிப்பேட்டை | 1. | உதவி ஆணையர் (வவ), இராணிப்பேட்டை | 140.00 |
| | | 2. | உதவி ஆணையர் (வவ), இராணிப்பேட்டை (சிப்காட்) | |
| | | 3 | உதவி ஆணையர் (வவ), இராணிப்பேட்டை (செயலாக்கம்) | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | விருத்தாச்சலம் | உதவி ஆணையர் (வவ), விருத்தாச்சலம் | | 111.00 |
| 3. | அரியலூர் | 1. | உதவி ஆணையர் (வவ), அரியலூர் | 114.00 |
| | | 2. | வணிகவரி அலுவலர் (செயலாக்கம்), அரியலூர் | |
| 4. | கள்ளக்குறிச்சி | வணிகவரி அலுவலர், கள்ளக்குறிச்சி | | 81.00 |
| 5. | செஞ்சி | வணிகவரி அலுவலர், செஞ்சி | | 81.00 |
| 6. | அரூர் | வணிகவரி அலுவலர், அரூர் | | 81.00 |
| 7. | அம்பாசமுத்திரம் | வணிகவரி அலுவலர், அம்பாசமுத்திரம் | | 81.00 |
| 8. | நாங்குநேரி | வணிகவரி அலுவலர், நாங்குநேரி | | 81.00 |
| 9. | திருச்செந்தூர் | வணிகவரி அலுவலர், திருச்செந்தூர் | | 76.00 |
| 10. | திருப்பூர் | 1. | துணை ஆணையர் (வவ), திருப்பூர் | 271.58 |
| | | 2. | உதவி ஆணையர் (வவ), இலட்சுமிநகர் | |
| | | 3. | வணிகவரி அலுவலர், சிறப்பு வட்டம்–I | |
| | | 4. | வணிகவரி அலுவலர், சிறப்பு வட்டம்–II | |
| மொத்தம் | | 16 அலுவலகங்கள் | | 1117.58 |

பொதுவாக, தனியார் கட்டடங்கள் அரசுத்துறை அலுவலகத்தின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்படாததால் இக்கட்டடங்களில் இயங்கிவரும் அரசு அலுவலகங்களை நாடி வரும் பொதுமக்கள் மற்றும் அங்கு பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். நாடி வரும் பொதுமக்கள் மற்றும் அங்கு பணிபுரியும் அலுவலர்களின் தேவையினை



மனதிற்கொண்டு, தற்பொழுது கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதால், சாய்தளம் மற்றும் கைப்பிடிகள், பார்வையாளர் பகுதி, போதிய கழிப்பறை வசதிகளோடு, மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தீயணைப்பு ஏற்பாடுகள் போன்றவை உள்ளன.

## 19.2. சோதனைச் சாவடிகள் மற்றும் சோதனை முனையங்கள் நவீனமயமாக்கல்

போதிய மனித வளமின்மை, இணையதள இணைப்பு மற்றும் மின் விநியோகத்தில் தடங்கல்கள், சரியான இடத்தில் அமையாதது, போதிய இடவசதியின்மை போன்ற செயல்பாட்டு சிரமங்களை 28 சோதனைச் சாவடிகள் மற்றும் 8 சோதனை முனையங்கள் சந்தித்து வந்தன. இக்குறைபாடுகளை சீர்செய்யும் நோக்கிலும், சோதனைச்சாவடிகள் மற்றும் சோதனை முனையங்களை பலப்படுத்திடவும், அரசு ரூ.33.36 கோடிக்கு (தொடரா செலவினம் ரூ.28.95 கோடி, தொடர் செலவினம் ரூ.4.41 கோடி) அரசாணை (நிலை) எண்.94, நாள் 9.7.2012–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையானது, எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கு நிலத்தைக் கையகப்படுத்துதல், கட்டடங்களைக் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல், வாகனங்கள் வாங்குதல், மின்னாக்கிகள் வாங்குதல் போன்றவற்றிற்கு உபயோகப்படுத்தப்படும்.

### 19.3 பழைய வாகனங்களுக்கு பதில் புதிய வாகனங்கள் வழங்குதல்

துறை அலுவலர்களின் செயலாக்கத்தினை உறுதி செய்திடும் நோக்கில், 2012–13–ம் ஆண்டில் ரூ.86.91 இலட்சம் செலவில் பழைய வாகனங்களுக்கு பதிலாக, 16 புதிய வாகனங்களை கொள்முதல் செய்வதற்கு அரசாணை (நிலை) எண்.135, நாள் 25.10.2012–இல் அரசு நிதி ஒப்புதலளித்துள்ளது.

### 20. 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம்

அரசு அமைப்புகள் வெளிப்படையாக இயங்குவதற்காக 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச்சட்டம் இயற்றப்பட்டது. அரசிடம் உள்ள தகவல்களை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வழங்குவதை இச்சட்டம் கட்டாயமாக்குகிறது. வணிகப்பெருமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள வணிகவரித்துறையானது அதன் செயல்பாடுகள் எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. இக்குறிக்கோளை எய்திடும் நோக்கில், 2005-ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும் இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கோரிய தகவல்களை அளித்து வருகிறது. 2012-ஆம் ஆண்டில், அதாவது 1.1.2012 முதல் 31.12.2012 வரை, 2005-ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் 345 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உரிய தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்கு காலந்தாழ்த்தாமல் அளிக்கப்பட்டன.



### 21. 2013–2014–ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டங்கள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வணிகவரி ஆணையர் அலுவலகத்திற்கு புதிய மின்னனு தனியார் தானியங்கி பரிமாற்ற இயந்திரம் (EPABX) கொள்முதல் செய்தல். | 4.25 |
| 2. | வணிகவரித்துறை அலுவலகங்களுக்கு 12 மின்னோட்ட மாற்றுவிசை சாதனங்கள் (Inverter) கொள்முதல் செய்தல். | 4.20 |
| 3. | சென்னை (செயலாக்கம்–1) கோட்டத்திற்கு தகவல் மீள்கொணர் மென்பொருள் (Data Retrieval Lab) (துடயவியல்) சாதனம் வழங்குதல். | 5.00 |
| | மொத்தம் | 13.45 |

**பி வி ரமணா**
**வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**